பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 06 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கனடா பயணம் வெற்றிகரமாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைந்திருந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்த அமெரிக்கா எந்த நிலையிலும் மத்தியஸ்தம் செய்யவில்லை என்று மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

3. மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் இரண்டு நாள் பயணமாக இன்று பிரிட்டன் புறப்பட்டு சென்றார்.

4. சென்னையில் கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தின் பயன்பாட்டை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. பிரான்ஸ் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Adil Kalyanpur - Parikshit Somani** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது கனடா பயணம் வெற்றிகரமாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைந்திருந்ததாக தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஜி-7 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக அந்நாட்டு அரசுக்கும், மக்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இந்த மாநாட்டிற்கு இடையே உலகளாவிய பன்முக பிரச்சினைகள் தொடர்பாக ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்தியதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், தொடர்ந்து அமைதி, முன்னேற்றம் மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தென்னாப்பிரிக்க அதிபர் திரு ராமபோஸா, பிரேசில் அதிபர் திரு லூலா டா சில்வா ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்ததாகவும் மற்றொரு பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசியதுடன், எதிர்காலத்தில் வலுவான ஆதரவுடன் செயலாற்ற உறுதிபூண்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமது மூன்று நாடுகள் பயணத்தின் நிறைவாக, பிரதமர் கனடாவிலிருந்து இன்று காலை குரேஷியா புறப்பட்டுச் சென்றார்.

<<<<<>>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையே வர்த்தகம் குறித்து எந்த நிலையிலும் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர், அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது இதனை தெரிவித்ததாக வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக அண்மையில் நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாக, அமெரிக்கா உதவியுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப்படவில்லை என்று பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

ராணுவ நடவடிக்கையானது, இந்தியா – பாகிஸ்தான் நேரடி பேச்சுவார்த்தையின்மூலம் நிறுத்தப்பட்டது என தெளிவுபட பிரதமர் கூறியதாக தெரிவித்தார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செய்வதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்றும் எதிர்காலத்திலும் அதுபோன்ற நிலையை ஏற்றுக்கொள்ளாது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்க அதிபரிடம் வலியுறுத்தி தெரிவித்ததாகவும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

**<<<<<>>>>>>**

இந்தியாவும், கனடாவும் பரஸ்பரம் தங்கள் நாட்டு தலைநகரங்களில் தூதர்களை மீண்டும் பணி அமர்த்த சம்மதம் தெரிவித்துள்ளன.

**Kananaskis** நகரில் ஜி-7 உச்சிமாநாட்டுக்கு இடையே கனடா பிரதமர் திரு **Mark Carney** – யுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நடத்திய இருதரப்பு பேச்சுக்களின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேம்படுத்துவது என்றும் சமீபத்திய பதற்றத்தை முடிவுக்கு கொண்டுவருவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகவும் அவர் மேலும் கூறினார்.

**<<<<<>>>>>>**

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தலைமையிலான உயர்நிலைக்குழு இரண்டு நாள் பயணமாக இன்று பிரிட்டன் புறப்பட்டு சென்றது.

இந்த பயணத்தின்போது இந்தியா – பிரிட்டன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த குழுவினர் விரிவான பேச்சுக்கள் நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதவிர, அந்நாட்டுடனான வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பது குறித்தும், தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்திருப்பதாக இந்தியா – பிரிட்டன் பிரதமர்கள் அறிவித்ததன் பின்னணியில் அதுதொடர்பான கருத்துக்கள் குறித்தும் திரு பியூஷ் கோயல் தலைமையிலான குழு விவாதிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

**<<<<<>>>>>>**

தமிழகத்தின் மதுரையில் நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டை முன்னிட்டு, சிறப்பு ரயில் இயக்க அனுமதி அளித்த ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ்-க்கு, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், வரும் 22-ஆம் தேதி முருக பக்தர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், பக்தர்களின் கோரிக்கையை ஏற்று, சென்னை எழும்பூர் - நெல்லை இடையே வரும் 21-ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

ஆந்திர மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் நக்ஸலைட் அமைப்பின் முக்கிய தலைவர்கள் இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அல்லூரி சீதாராம ராஜீ மாவட்டத்தின் **'Maredumilli '** வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் கொல்லப்பட்டதாகவும், தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

சென்னையில் கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தின் பயன்பாட்டை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், சென்னை குடிநீர் வாரியம் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுமார் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 இடங்களில் கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை நிறுவியுள்ளது.

அவற்றை தொடங்கிவைக்கும் விதமாக மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில அமைக்கப்பட்டுள்ள குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தின் பயன்பாட்டை முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>>

சர்வதேச யோக தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் யோகா தினத்தன்று தன்னார்வலர்களுடன் இணைந்து மாணவ, மாணவியர் யோகாசனம் செய்வது தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***('Sound Byte - ' தண்டபாணி – 33 'Sec.)***

<<<<<>>>>>>

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் மேற்கொள்ளவிருந்த **Axiom -4** திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விண்வட்ட சுற்றுப்பாதை செயல்பாடுகளை நாசா ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கும் வகையில் இந்த விண்வெளித் திட்டம் வரும் 22-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மேகாலயா, மேற்குவங்கத்தின் கங்கை கரையோரப்பகுதிகள், ஜார்கண்ட், ஒடிஷா மாநிலங்களின் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகாரின் குறிப்பிட்ட சில பகுதிகள், சட்டீஸ்கர், கடலோர கர்நாடக பகுதிகள், குஜராத், கொங்கன் மற்றும் கோவா, மகாராஷ்ட்ரா மாநிலத்தின் மத்தியப்பகுதி, வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, இன்று முதல் வரும் 23-ஆம் தேதிவரை தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

இதற்கிடையே, மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நீர்வரத்து குறைந்ததால், சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - ' செந்தில் - 41 'Sec.)***

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Adil Kalyanpur - Parikshit Somani** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 0-6, 6-3, 10-5 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **'Simone Agostini -** ஸ்பெயினின் **Mario Mansilla** இணையை வென்றது.

---------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகாஜா எமணப்பள்ளி - ஸ்லோவேக்கியாவின் **Martina Okalova** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------------

ஜெர்மனியில் நடைபெறவுள்ள நான்கு நாடுகள் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி இன்று பெங்களூருவிலிருந்து புறப்பட்டு சென்றது.

வரும் 21-ஆம் தேதி தொடங்கவுள்ள இப்போட்டியில் இந்தியா முதல் ஆட்டத்தில் ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

----------------

புரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

-------------------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை இன்று மதுரை அணியை எதிர்கொள்கிறது.

----------

இந்திய மாஸ்டர்ஸ் கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று சென்னையில் தொடங்கியது.

**<<<<<END>>>>>**